நம்முடைய உறுப்பினர் நா.சா. பழனிசாமி அவர்களும், அவர்களுடைய தலைவர் செல்லமுத்து அவர்களும் சந்தித்தபோது, இந்த நிலவள வங்கிகளினுடைய கடனையே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே மாற்றிக் கொடுத்தால் என்ன என்று கூட ஒரு யோசனையைச் சொன்னார்கள். இன்னும் அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யவில்லை. ஆனாலும் இன்னும் வேகமாக நடவடிக்கை எடுப்பதற்கு நிலவள வங்கிகளுக்கு உத்தரவிடப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், சிறு தொழில்களுக்குக்கூட இப்போது கடன் கொடுக்கின்ற நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதிலே ஒரு குறை என்னவென்றால், நம்முடைய நிலவள வங்கிகளில் இருக்கின்ற ஊழியர்கள் நிரந்தர ஊழியர்களாக, அங்கேயே எந்தவிதமான மாறுதலும் செய்யப்பட முடியாத ஊழியர்களாக இருக்கிற காரணத்தால், நம்முடைய நல்ல திட்டங்கள் எல்லாம் மக்களுக்குப் போய்ச் சேருவதில் ஏராளமான தடங்கல்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த நிலவள வங்கிகளில் இருக்கின்ற ஊழியர்களை நிலவள வங்கிகளுக்குள்ளேயே 3 வருடத்திற்கு ஒரு முறை மாற்றுகின்ற ஒரு சூழ்நிலையை நம்முடைய அரசு உருவாக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ஏற்கனவே அரசின் கவனத்திற்கு வந்து, அவர்களுக்கு தனியாக காமன் கேடர் உருவாக்குவதற்கு ஒரு குழுவை நியமித்து, அது சீக்கிரத்திலேயே அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறது. அது வந்தபிறகு, அவர்களை அங்கிருந்து மாற்றுவதற்கு உரிய வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 333, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

333—

மத்திய அரசு அறிமுகப்படுத்தும் கூட்டுறவுச் சட்டம்.

20016 திரு. வி.கே. லட்சுமணன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய அரசு அறிமுகப்படுத்த இருக்கிற கூட்டுறவுச் சட்டத்தின் மாதிரி நகல் தமிழக அரசுக்கு வந்துள்ளதா?

1993 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், அது குறித்து கூட்டுறவாளரின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மத்திய அரசு புதிய கூட்டுறவுச் சட்டத்தினுடைய மாதிரி நகலை தமிழக அரசுக்குக் கொடுத்துள்ளது.

(ஆ) இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தின் நகல்கள் இம்மாநிலத்திலுள்ள எல்லா செயல்முறைப் பதிவாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு, அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு, அவர்களுடன் இதுபற்றி விவாதிக்கப்பட்டது. மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தில் உள்ள பல்வேறு நல்ல அம்சங்களைக் கண்டறியவும், தற்போதுள்ள மாநிலச் சட்டத்திலுள்ள குறைகளை மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தினோடு ஒப்பிட்டு சுட்டிக்காட்டவும், சர்க்கரைத்துறை ஆணையர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், பால் துறை ஆணையர், கைத்தறித்துறை ஆணையர், தொழில்துறை ஆணையர் ஆகியோர் கொண்ட சிறு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு, 1--5-1993-க்கு முன்னர் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கிடைத்த பிறகு, மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தை ஏற்றுக்கொள்வது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. வி. கே. லட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968 ஆம் ஆண்டு சென்னையிலே மாநில முதல்வர்கள், மாநில கூட்டுறவு அமைச்சர்கள் ஆகியோர் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டிலே கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்துவதற்காக பல பரிந்துரைகள் செய்யப்பட்டன. அதைப்போல 1987 ஆம் ஆண்டு அர்த்தநாரீஸ்வரன் கமிட்டி பல பரிந்துரைகளைச் செய்தது. இன்றைக்கு ஒரு மாதிரிச் சட்டத்தை உருவாக்குவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு - திட்டக் கமிஷனால் நியமிக்கப்பட்டு-அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை இன்றைக்கு மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கை கூட்டுறவிலே பல நல்ல ஜனநாயக நெறிகளை அமல் படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற ஒரு மாதிரிக் கூட்டுறவுச் சட்டம் ஆகும். எனவே அந்தச் சட்டத்தைப் பரிசீலிப்பதற்காக தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாக ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்து தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்துக் கூட்டுறவாளர்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துக்களையும் தெரிந்து கொள்ள அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.*

[1993 ஏப்ரல் 13

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மாதிரிக் கூட்டுறவுச் சட்டம் மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் சொன்னதைப் போல மிகப் பெரிய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று அதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. குறிப்பாக இப்போது அரசாங்கத்திற்கும் பதிவாளர்களுக்கும் இருக்கிற பல அதிகாரங்களை அதிலே நீக்கிவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதேபோல அரசாங்கத்தினுடைய பணத்தையே கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது, ஈக்குவிட்டி ஷேர் கூட வாங்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்கள் எல்லாம் கூட கூட்டுறவிலே வேலையே செய்யக்கூடாது என்றெல்லாம் மிகப் பெரிய வித்தியாசமான கருத்துக்கள் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவேதான் அதைத் தீவிரமாக யோசித்து அதைப்பற்றி ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று அரசு ஒரு குழு அமைத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து தேவையானால் ஒரு பெரிய கருத்தரங்கை ஏற்பாடு செய்வதற்கும் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. ஆர்.எஸ். வெங்கடேசன்.

திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு புதிதாக கூட்டுறவுச் சட்டத்தை அமல் ஆக்கிய பின்பு தமிழகத்திலே கூட்டுறவுத் தேர்தல் நடைபெறுமா அல்லது அதற்கு முன்பே நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறோம். தேர்தலைப்பற்றி இப்போது விவாதம் இல்லை. ஆனாலும் அதற்காகக் காத்துக்கொண்டிருக்கப் போவது இல்லை. சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற வழக்கு முடிந்த பின்னாலே தேர்தல் நடைபெற வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்திரவு இட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அறிமுகப்படுத்தியிருக்கிற இந்தக் கூட்டுறவுச் சட்டத்தின் மேல் கூட்டுறவாளர்களின் கருத்தை அறிவதற்காக அமைச்சர் அவர்கள்

ஒரு குழு அமைப்பதாகக் கூறினார்கள். அதில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருப்பது- ஒரு கருத்தரங்கம் நடத்த வேண்டும் என்று தான் மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அத்தகைய கருத்தரங்கில் அந்தக் கூட்டுறவிலே ஈடுபடக்கூடிய எல்லா மாண்புமிகு உறுப்பினர்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துக்களும் கேட்கப்படும், கோரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 334, திரு என்.ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

334—

நெல் கொள்முதல் செய்யும்போது உரமான்யம் ஊக்கத் தொகையாக வழங்கல்.

** 15865 திரு என்.ஆர். ராஜேந்திரன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது அரசு வழங்கிவரும் உரமான்யத்தை ரத்து செய்துவிட்டு அரசு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும்போது உரமான்யம் ஊக்கத்தொகையாக வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நெல் தனி உரிமை கொள்முதல் மூலம் காவிரி டெல்டாப் பகுதிகளில் மட்டும்தான் அரசால் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் இந்தக் கோரிக்கையை செயல்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. மேலும், உர மான்யம் மத்திய அரசினால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படுகின்ற திட்டமாகும். ஒரு சில மான்யத்திட்டங்கள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டுமே பொருந்தும். எனவே, அதைச் செயல்படுத்த இயலாது.

முற்பகல் 10.50

திரு. என்.ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு சிறு விவசாயிகளுக்காக புதிய புதிய சலுகைகளை வழங்கி வருகிறது. அந்தச் சலுகைகளைச் செயல்